திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ரூல்ஸிலேயே மாற்று வேலை கொடுக்க வேண்டுமென்ற கருத்தை அமைச்சரவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் கொடுக்கிற வாக்குறுதியே போதும் என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கருதுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சரவர்களின் வாக்குறுதியை நான் தாராளமாக ஏற்றுக்கொண்டு திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

Clause 42 was put and carried.

Clauses 43 to 46 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move—

'That the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1972 (L.A. Bill No. 38 of 1972) be passed'.

The motion was put and carried and the Bill was passed into Law.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, விவசாய வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.